Registered as a News Paper பக்கங்கள் 4 விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆடி 18 02 - 08 - 1992 ஞாயிற்றுக்கிழமை ஓசை 166

## சிங்கள அரச அதிகாரிகளால் தமிழ் மொழி படுகொலை

தமிழ் மொழி அரச கரும மொழி ஆக்கப்பட்டதாக கூறப்பட்ட பின்பும் சிறிலங்கா அரச அதிகாரிகள் தமிழைத் தொடர்ந்தும் படுகொலை செய்து வருவதை அவதானிக்க முடிகிறது. அண்மையில் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு வவுனியா பகுதியில் வாழும் ஒருவருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதம்ஒன்றில் 'பிரதிசன்கரன புனருத்தாபன ஆசமாக சுபசதன அமர்த்தியஞ்செ' என எழுதப்பட்டுள்ளது. இந்தப்புதுமையான சொற்களிற்கான கருத்தை மூன்று மொழிகளின் அகராதிகளிலுமே கண்டுபிடிக்க முடியாதநிலை ஏற்பட்டுள்ளது. சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் ஒழுங்கான ''புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு'' என எழுதப்பட்டு அதன் கீழே மேற்கண்ட வசனம் எழுதப்பட்டுள்ளது.

(4ஆம் பக்கம் பார்க்க)

# ஐ. நா. சபைக்கு தமிழர் பிரச்சினை மேற்குலக நாடுகளிடம் வற்புறுத்து

## அரச சார்பற்ற நிறுவனங்கள் முயற்சி

(லண்டன்)

தமிழீழ மக்களின் தேசிய இனப்பிரச்சினையை ஐக்கிய நாடுகள் சபைக்கு எடுத்துச் செல்ல முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. சிறிலங்காவுக்கு உதவி வழங்கும் வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்கள் இம் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளன. தமிழீழ மக்களின் தேசிய பிரச்சினையில் அக்கறையும் அனுதாபமும் கொண்டுள்ள மேற்குலக நாடுகள் மூலமாக இப்பிரச்சினையை ஐ. நா. சபைக்கு எடுத்துச்செல்ல இந்த அரச சார்பற்ற நிறுவனங்கள் ராஜரீக முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதாக நம்பகரமான வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

தமிழர் பிரச்சினையில் அரசியல்தீர்வு ஏற்படும் சாத்தியக் கூறுகள்அற்றுப்போனதாலும், சிறிலங்கா பேச்சுக்களுக்கான கதவுகளை இறுக அடைத்து விட்டதாலும் இப்பிரச்சினை ஐ. நா. சபை மூலமாகவே தீர்த்து வைக்கப்படவேண்டும் என சிறிலங்காவுக்கு உதவி வழங்கும் அரச சார்பற்ற நிறுவனங்கள் கருதுகின்றன. ஏற்கனவே, தமிழர் பிரச்சினையில் மத்தியஸ்துவம் வகிக்க முன்வந்த நாடுகள் மூலமாக இப்பிரச்சினையை ஐ. நா வுக்கு எடுத்துச் செல்ல இந்நிறுவனங்கள் முயற்சித்துவருகின்றன. சுவீடன், டென்மார்க், நோர்வே, சுவிட்சர்லாந்து, அவுஸ்திரேலியா, கனடா, பிரிட்டன் போன்ற நாடுகளை இந் நிறுவனங்கள் அணுகியுள்ளதாகவும் இது குறித்து தீவிர ராஜதந்திர முயற்சிகள் வெளிநாட்டுத் தலைநகர்களில் நடைபெறுவதாகவும் தெரியவருகிறது.

## தந்திரிமலை பிக்கு கொலை ஒரு பிக்கு விளக்கமறியலில்

தந்திரிமலையில் பௌத்த பிக்கு ஒருவர் குண்டுவெடிப்பினால் கொலையுண்டது தொடர்பாக மற்றொரு இளம் பிக்கு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். மற்றுமிருவர் நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

தந்திரிமலை ரஜமகா விகாரையில் பௌத்த பிக்கு விமல ஞானதேரர் கொலையுண்டது தொடர்பாக கொழும்பிலிருந்து சென்ற விசேட புலனாய்வு பிரிவு பொலிசாரால் நடத்தப்பட்ட விசாரணைகளையடுத்து கைதான மூன்று சந்தேக நபர்கள் அநுராதபுரம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

அப்போது இருவரை விடுதலைசெய்த நீதிவான் மற்றவரான இளம் பிக்குவை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

தந்திரிமலையில்

## சிப்பாய்மரணம் குறித்து புலன் விசாரணை

(கொழும்பு)

தந்திரிமலை விகாரையில் கொலை செய்யப்பட்ட தேரரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்ட இராணுவ சிப்பாய் ஒருவரின் மரணம் குறித்தும் இரகசியப் பொலிஸார் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

மேற்படி இராணுவச் சிப்பாய் வைத்திருந்த துப்பாக்கி தற்செயலாக வெடிததததே அவர் மரணமானதற்கு காரணம் என பொதுவாக கூறப்பட்ட பொழுதிலும் பத்து பேர் அடங்கிய இரகசியப் பொலிஸ் கோஷ்டி ஒன்று இது பற்றி விசாரணை நடாத்தி வருகிறது.

இந்த இராணுவச் சிப்பாய் தற்கொலை செய்து கொண்டாரா? அல்லது துப்பாக்கி தற்செயலாக வெடித்ததால் கொல்லப்பட்டாரா? இல்லாவிடில் வேறு யாராவது அவரைச் சுட்டனரா என்பது குறித்து விசாரிக்கப்பட்டு வருகிறது

தேரரின் கொலைக்கும் இறந்த சிப்பாயின் மரணத்துக்கும் ஏதாவது காரணம் இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் விசாரணைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

## படைகள் அயர்ந்திருக்கும் நேரத்தில் புலிகள் தாக்குகிறார்கள்

### கேர்ணல் முனசிங்கா ஆதங்கம்

(கொழும்பு)

1990 ஆம் ஆண்டிலிருந்து கிழக்கில் படையினர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். இதனால் படையினர் களைப்பு அடைந்திருக்கலாம். அவர்கள் அயர்ந்திருக்கும் நேரத்தில் புலிகள் தாக்...

அவர் மேலும் தெரிவிக்கையில்; எப்படியிருப்பினும் இப்படியே நாம் தொடர்ந்து பயிற்றப்பட் படையினரை இழக்க முடியாது. எமது உத்திகள் கிழக்கில் மாற்றப்பட வேண்டும்.

வீதிரோந்தில் ஈடுபட்டுள்ள ...

...கைகளில் புதிய உத்திகளைக் கையாளவேண்டும் கிழக்கில் கடந்த 29ஆம் திகதி சம்பவத்தில் ஆயுதங்களையும் இழந்துள்ளோம.

புலிகளை அடக்க யாழ்ப்பாணத்தை மட்டுமல்ல புலிகள் எங்கெல்லாம் பலம் வாய்...

## செப். 5இல் யாழ். பல்கலை பட்டமளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தின் 15 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா அடுத்த மாதம் முற்பகுதியில் (1992-09 05) நடாத்த பல்கலைக்கழக மூதவை தீர்மானித்துள்ளது.

டிப்புளோமாக்கள், பட்டங்கள், பட்டப்பின் டிப்புளோமாக்கள், முதுமாணி, கலாநிதி உட்பட 14 துறைகளுக்கு பட்டமளிப்பு விழா நடைபெறவுள்ளது.

கடந்த வருடம் முதல் சித்த மருத்துவத் துறையிலும் பட்டங்கள் வழங்கப்பட்டுவருவது தெரிந்ததே. (05)

## பயிற்சி வகுப்புகள் ஆரம்பம்

(மானிப்பாய்)

யாழ். போதனா வைத்திய சாலையில் தெரிவு செய்யப்பட்ட பரிசகாரர்களுக்கு பயிற்சி வகுப்புகள் ஆரம்பமாகியுள்ளன மேற்படி தெரிவு செய்யப்பட்டவர்களில் [illegible] மாவட்டத்தைச் சேர்ந்தவர்களும் அடங்குவர்.

இவர்களுக்கு மூன்று மாதத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## 2 ஆம் கட்ட வினாத்தாள்கள் ஆகஸ்ட் 4இல் வரும்

(யாழ்ப்பாணம்)

க. பொ. த. உயர்தரத்திற்கான பரீட்சையின் இரண்டாம் கட்ட வினாத்தாள்கள் எதிர்வரும் நான்காம் திகதி கொழும்பிலிருந்து பலாலிக்கு எடுத்து வரப்பட இருக்கிறது.

பின்னர் அங்கிருந்து பருத்தித்துறைக்கு எடுதது வரப்பட்டு யாழ். கல்வித்திணைக்களத்திற்கு கொண்டுவரப்படும் அதேவேளை நேற்று திட்டமிட்டபடி பரீட்சை ஆரம்பமாகியது.

இன்று வரும் என எதிர்பார்க்கபபடும் 'குமண' என்ற கப்பல் திரும்பிச் செல்லும்போது முதற்கட்ட விடைத்தாள்கள் திருத்த வேலைகளுக்காக அனுப்பி வைக்கப்படும். (க). (பர)

## ஓய்வுபெற்றோர்வெற்றிடம் நிரப்பப்பட மாட்டாது

(யாழ்ப்பாணம்)

சுயவிருப்பத்தின்அடிப்படை...

உலக வங்கியின் ஆலோசனைப் படியே மேற்படி தீர்...

பொலிஸ் கோஷ்டி ஒன்று இது

முடுக்கி விடப்பட்டுள்ளன.

குதல் நடத்துகின்றனர்.

இவ்வாறு கூட்டுப்படைகளின் பேச்சாளர் கேர்ணல் சரத் முனசிங்க தெரிவித்தார்.

இராணுவத்தினரின் பலவீனங்களை புலிகள் தமக்கு சாதமாகப் பயன்படுத்திவருகின்றனர்.

வீதிச்சோதனை, வாகனப் பாதுகாப்பு போன்ற நடவடிக்

ந்தவர்களாக இருக்கிறார்களோ அங்கெல்லாம் நாம் போகவேண்டும் என தெரிவித்தார்.

யில் அரச ஊழியர்கள் ஓய்வு பெற்றமையினால் உருவாகிய வெற்றிடங்கள் எவையும் மீண்டும் நிரப்பப்படமாட்டாது.

இதற்கான தீர்மானத்தை பொது நிர்வாக மாகாண சபைகள்அமைச்சுமேற்கொண்டிருக்கிறது.

மானம் எடுக்கப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது.

மிகவும் அத்தியவசியாமானது எனக கருதப்படும் பட்சத்தில் மட்டும் சில நிபந்தனைகளின் அடிப்படையில் ஒரு சில வெற்றிடங்களை நிரப்புவதற்கு தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

ஜே. ஒ.சி. குண்டுவெடிப்பு

# 4 ஆம் எதிரி மீது மேலும் ஒரு வழக்கு

(கொழும்பு)

கூட்டுப்படைத் தலைமையக குண்டு வெடிப்பு வழக்கில் 4 ஆம் எதிரியாக குற்றம் சாட்டப் பட்டிருந்த சுன்னாகம் சுந்தரோடையைச் சேர்ந்த சட் என்ற அருணாசலம் சுரேந்திரனுக்கு எதிராக சட்டமா அதிபர் தொடர்ந்துள்ள வழக்கிற்கான குற்றப்பத்திரிகை மேல் நீதிமன்ற நீதிபதி எஸ்.என்.டி. ஜெயசூரியா முன்னிலையில்கையளிக்கப்பட்டது.

அக் குற்றப் பத்திரிகையில் 1. 1. 91 க்கும் 1. 3. 91க்கும் இடைப்பட்ட காலகட்டத்தில் முன்னாள் பாதுகாப்பமைச்சர் ரஞ்சன் விஜேரட்னாவை கொலை செய்வதற்கு பொட்டம்மானும் பிரேமும் திட்டமிடுகிறார்கள் என்பதை தெரிந்திருந்தும் அறிவிக்கவில்லை என்றும் 1. 1. 89 க்கும் 30. 6. 91 க்கும் இடைப்பட்ட காலத்தில் விடுதலைப் புலிகளுடன் இணைந்து ஆயுதப் பயிற்சி எடுத்ததாக பயங்கரவாத தடைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் குற்றஞ் சாட்டப்பட்டது.

இவ் வழக்கை ஏற்ற நீதிபதி இம் மாதம் 17 ஆம் திகதி வழக்கை ஒத்தி வைத்துள்ளார்.

# இராணுவத்தில் சேருவதற்கு கல்வித் தகைமை குறைப்பு

(கொழும்பு)

சிறிலங்கா காலாற்படையில் ஆட்களைச் சேர்ப்பதற்காக கல்வித் தகைமையும் வழமையை விட குறைக்கப்பட்டுள்ள அதே நேரம் வேறு சலுகைகளும் வழங்கப்பட்டுள்ளதாக கொழும்பு பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

படையினரின் தொகையில் ஏற்பட்ட இழப்பும், வேறு இடங்களுக்கு படையினரை இடமாற்றும்திட்டத்தினாலேயே இவ் வெற்றிடங்களுக்கு நிரப்ப கூட்டுப்படைத் தலைமையகம் நடவடிக்கை எடுத்து வருகிறது

இதறகான தலைமைக்காரியாலயங்கள் காலியிலும், புத்தளத்திலும் அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடகிழக்கில் சேவை புரிவோருக்கு விசேட அலவன்சும் வழங்கப்படுமென மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)

# 40,000 ரூபா நஷ்டஈடு வழங்க நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

இராணுவத்தினரால் மனிதாபிமானமற்ற முறையில் கொடூரமான சித்திரவதைக்குள்ளாக்கப்பட்ட, எம். எஸ். எவ். எனும் பிரெஞ்சு மருத்துவத் தொண்டர் நிறுவன சாரதியான பஸ்தியாம்பிள்ளை அமிர்தகுமாருக்கு 40 ஆயிரம் ரூபா நஷ்டஈடு வழங்கப்பட வேண்டுமென உயர் நீதிமன்றம் ஆணையிட்டுள்ளது.

[4 ஆம் பக்கம் பார்க்க]

# புலிகள் ஊடுருவியதாக கிலி தமிழக பொலிஸ் பதற்றம்

(சென்னை)

தமிழ் நாட்டினுள் புலிகளின் அதிரடி பிரிவு ஒன்று ஊடுருவியுள்ளதாக கிடைத்த தகவல்களை அடுத்து தமிழக பொலிஸ் வட்டாரங்களில் பதற்றம் ஏற்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள 26 பேரை விடுவிக்கவே புலிகளின் அதிரடிப்பிரிவு தமிழகம் வந்துள்ளதாக தகவல் கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து இந்த 26 பேரும் சிறைவைக்கப்பட்டுள்ள செங்கல்பட்டு சிறைச்சாலையின் காவல் பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும், இதற்கென ஹரியானா மாநிலத்தில் இருக்கும் மனீசார் அதிரடிப் பாடசாலையில் விசேட பயிற்சிபெற்ற படையினர் செங்கல்பட்டு சிறைச்சாலையை சுற்றி ஏ. கே.- 47 துப்பாக்கிகளுடன் காவலுக்கு நிற்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் தாக்குதலுக்கு ஓர் ஊர்காவல் படை பலி

திருக்கோணமலை கொக்குவிழுந்தானில் புலிகள் நடத்திய தாக்குதலில் ஊர்காவல் படையைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டார். இவரிடமிருந்த சுழல் துப்பாக்கியும் இரண்டு தோட்டாக்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

நேற்றுக்காலை 7.00மணியளவில் இத் தாக்குதல் நடத்தப்பட்டது.

எயர் லங்கா விமானம்

# குற்றப் பணம் செலுத்தாததால் மலேசியாவில் தடுத்துவைப்பு

எயர்லங்கா நிறுவனத்தின் ''டிரைஸ்ரார்'' விமானமொன்றுமலேசியாவில் தரையிறக்கப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளது. நீதிமன்ற உத்தரவின் படியே மலேசிய அதிகாரிகளால் இந் நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டதாகவும் தெரிய வருகின்றது இவ் விமானம் கொழும்பில் இருந்து கோலாலம்பூர் வழியாகசிங்கப்பூரைநோக்கிச் சென்றுகொண்டிருந்தது இது குறித்துகருத்து வெளியிட்ட எயர்லங்கா பேச்சாளர் மலேசிய விமான முகவர்களின் செயற்பாடுகளினாலேயே இத்தகைய சர்வதேச தகராறுகள் ஏற்படுகின்றன என தெரிவித்தார்.

மேலும் இந் நடவடிக்கையினால் 88 பிரயாணிகள் சிரமமடைந்ததாயும், இம் முகவருக்கெதிராய் நடவடிக்கையெடுக்கப்படும் எனவும் குறிப்பிட்டார்

1990 ஆம் ஆண்டு 115 பேரை ஜெட்டாவிற்கு அழைத்துச் செல்வதாக மேற்படி பிரயாண முகவர் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டதாகவும், ஆனால் பின் அழைத்துச் செல்ல முடியாமற் போய்விட்டதாகவும் இதற்கு நஷ்டஈடாக 2 இலட்சம் டாலர் வழங்கும்படி நீதிமன்று எயர் லங்கா நிறுவனத்தைப் பணித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது இத் தொகை செலுத்தப்படாமையே விமானம் தடுத்து வைக்கப்படக் காரணம் என தெரியவருகிறது.

எனினும் இத் தீர்ப்பை எதிர்த்துஎயர்லங்கா விண்ணப்பித்துள்ளது எனவும் எயர் லங்கா அதிகாரிகள் தெரிவித்தனர்

# சுதந்திரக்கட்சி மாநாடு ஆகஸ்ட் 15வரைஒத்திவைப்பு

## அநுரா – சந்திரிகா மோதலின் எதிரொலி

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் வருடாந்த மாநாடு எதிர்வரும் 15 ஆம் திகதிவரை ஒத்திவைக்கப் பட்டுள்ளது. இன்று நடைபெற இருந்த இந்த மாநாடு சந்திரிகா - அநுரா பிணக்கின் காரணமாக ஒத்திவைக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

சிறிலங்காவின் பிரதான எதிர்க்கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உட்பூசல் அண்மையில் முதலாவதுபெண் பிரதமரான சிறிமாவோ பண்டார நாயக்காவிற்கு நடாத்தப்பட்ட பாராட்டு விழாவின் போது வெளிப்படையாக தெரியவந்ததாக பி. பி. ஸி. தெரிவித்தது.

இவ்விழாவில் சுதந்திரக் கட்சியின் தலைவர்களில் ஒருவரான அநுரா பண்டார நாயக்காவிற்கு அவரது ஆதரவாளர்கள் வாழ்த்துக் கோஷம் எழுப்பியபோது சந்திரிகாவே எதிர் காலத்தில் தமது குடும்பப் பெருமையை நிலைநாட்டுவாரென சிறிமா தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்கலுக்கு பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்த எதிர்க்கட்சிகள் முயன்றுவரும் போது இந்தப் பிளவை எதிர்க்கட்சிகள் கவலையுடன் நோக்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

# அரசு நிலை பலமானதால் பேசுமாறு கூறினோம்

## ரெலோ குழுவினர் தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் இயக்கம் அரசியல் இராணுவ ரீதியாக இப்பொழுது முடக்கப்பட்டுள்ளது. அரசு பலமான நிலையில் உள்ளது. அரசுக்கு சாதகமான நிலை காணப்படுவதனாலேயே புலிகளுடன் பேசுமாறு கோரினோம்.

இவ்வாறு ரெலோ குழுவைச் சேர்ந்த என். ஸ்ரீ காந்தா தெரிவித்தார்.

புலிகளுடன் பேசவேண்டும் என இவர் முன்னர் விடுத்திருந்த அறிக்கைக்கு முஸ்லிம் காங்கிரஸ் தரப்பில் கடும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டமையை அடுத்தே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துமாறு நாம் கோருவது அந்த இயக்கத்திற்கு பிரதிநிதித்துவ அந்தஸ்து இருப்பதாக ஏற்றுக்கொண்டல்ல.

ஒருசிலர் நினைப்பதுபோல் புலிகளின் துப்பாக்கிகளையிட்டு திடீர் அச்சம்கொண்டல்ல என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## வரி விளம்பரம்

**எழுதுவினைஞர் சேவை**

செப்ரம்பர் மாதம் நடைபெறவுள்ள போட்டிப் பரீட்சைக்கான துரித பயிற்சி வகுப்புக்கள், திங்கள் புதன் கிழமைகளில் ஆரம்பம் 3-8-92 2.00 மணி School of business Administration 16, 3rdcross street Jaffna. (சி/4805)

**விற்பனைக்கு**

கிணற்றுப்பங்குடன் 8 பரப்புத் தோட்டக்காணி அல்வாய் தெற்கில் கிராம சபைக்கு அருகாமையில் உண்டு. தொடர்பு திருமதி ப. சுப்பிரமணியம், அதிபர் அல்வாய் தெற்கு, அல்வாய் [சி/4773]

**ஜோதிட விஞ்ஞானம்**

எண் ஜோதிடம் விவாகப் பொருத்தங்கள், ரேகை சாஸ்திரம் ஜனன ஜாதகங்கள் பார்வையிட தினமும் காலை 9.00 மணிக்கு முன் நேரில் சந்திக்கலாம். Prof. சத்தியதாஸன் Mech. E. Elec E (பத்து வீட்டுத் திட்டம்) கட்டுடை. (2895)

# நேற்றைய சந்ததியின் தவறை இன்றைய சந்ததி விடக்கூடாது

## - அரசண்ணா

(கரவெட்டி)

நேற்றைய தலைமுறையினர் செய்த தவறினால் இன்றைய தலைமுறையினர் சொந்த மண்ணில் நிம்மதியாக சுதந்திரக் காற்றை சுவாசித்து வாழ முடியாத பரிதாப நிலையில் இருக்கிறார்கள். இன்றைய சந்ததியும் இதற்கொரு முடிவு கட்டவில்லை என்றால் நாளைய சந்ததியும் இதே துன்பங்களை அனுபவிக்க நேரிடும். அதைத் தவிர்க்க வேண்டிய கடமை இன்றைய சந்ததிக்கு உண்டு என்று அண்மையில் கரவெட்டியில் நடந்த போர்க்கால கருத்தரங்கு ஒன்றில் கலந்து கொண்ட திரு. அரசண்ணா தெரிவித்தார்.

திரு. பாஸ்கரன் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் பேசிய அவர் மேலும் கூறுகையில், இராணுவம் இழந்துவிட்ட ஆட்பலம், ஆயுத தளபாடபலம் என்பவற்றை ஈடுசெய்வதற்காக பலவேகய இரண்டு இடை நிறுத்தப்பட்டாலும் மீண்டும் பல வேகய மூன்றுவரும். அப்போது உங்கள் வரலாற்றுக் கடமையை நிறைவேற்ற முன் வாருங்கள் என்றும் கேட்டுக் கொண்டார்:

# சுவிற்சர்லாந்துசிறியதுதான் மொழிப்பிரச்சினை அங்கில்லை

## - தூதுவர் கிரபன்றெயிட்

(மட்டக்களப்பு)

"சுவிற்சர்லாந்தும் இலங்கையைப் போன்று ஒரு சின்னஞ்சிறிய நாடு அங்கு பல மொழி பேசுபவர்கள் வாழ்கிறார்கள். பல மதங்களைச் சேர்ந்தவர்கள் வசிக்கிறார்கள் அங்கு சகல மொழிகளுக்கும் அந்தஸ்து உண்டு. எவ்வித பிரச்சினையும் அங்கில்லை."

இவ்வாறு சுவிற்சர்லாந்து தூதுவர் அன்ட்றா விகிற பன்றெயிட் கூறினார். மட்டக்களப்புக்கு விஜயம் செய்த அவர் பெரிய உப்போடையில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார்.

கடந்த 150 ஆண்டு காலமாக சுவிற்சர்லாந்தில் சமாதானம் நிலவுகிறது. அதே போன்று இந்த நாட்டிலும் சமாதானம் நிலவ வேண்டும் என்றும் அவர் கூறினார்.

### விசேட கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ் செயலகத்தில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு விசேட கூட்டம் ஒன்று நடைபெற உள்ளது.

இக்கூட்டத்திற்கு பல நோ. கூ. சங்க பொது முகாமையாளர்கள் கூட்டுறவுச்சங்கங்களின் உதவிப் பொது முகாமையாளர் ஒவ்வொரு பிரதேச ஆணையாளர்கள் ஆகியோரை தவறாது சமுகமளிக்கும்படி யாழ் அரச அதிபர் கேட்டுக்கொண்டுள்ளார் (பT)

### தடுப்பூசி

கொழும்புத்துறை சனசமூக நிலையத்தில் யாழ். மாநகர சபை சுகாதாரப் பகுதியினரால் வளர்ப்பு நாய்களுக்கு விசர்நாய்த் தடுப்பூசி அண்மையில் போடப்பட்டது. (24

### உற்சவம்

அல்வாய்வேவிலந்தைமுத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி. இம்மாதம் 12-ம் திகதி காலை 9 00 மணிக்கு தேர் உற்சவமும், மறுநாள் 13 ஆம் திகதி காலை 6.00 மணிக்கு தீர்த்த உற்சவமும் நடைபெறும். (82)

# விவசாயிகளின் நீரிறைப்பில் உதவ நடவடிக்கை

(பருத்தித்துறை)

புலோலி, அம்பன் கமநலச் சேவை நிலையப்பகுதிகளுக்குட்பட்ட விவசாயிகளுக்கு விவசாயத் தேவைகளுக்கு நீர் இறைக்கும் இயந்திரங்களை வழங்குவதற்கான நடவடிக்கைக்கான புலோலிகமநலச் சேவை நிலையம் அம்பன்கமநலச்சேவை நிலையம் என்பன மேற்கொண்டுள்ளன நீர் இறைக்கும் இயந்திரம் தேவையான விவசாயிகள் தத்தமது பகுதி கிராமசேவை அலுவலர்களிடம் பதிவு செய்து கொள்ளுமாறு புலோலி அம்பன் கமநலச்சேவை நிலையங்களின் பெரும்பாக உத்தியோகத்தர் திரு. மகாதேவராஜா அறிவித்துள்ளார். (25)

நுண்கலைக் கல்லூரியில்

# சித்திரம் சிற்பம் பயிற்சிநெறி ஆரம்பிக்கக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் ஒரு அங்கமாக இயங்கும் இராமநாதன் நுண்கலைக் கல்லூரியில் சித்திரம் மற்றும் சிற்பம் ஆகிய துறைகளிலும் டிப்ளோமா பயிற்சி நெறிகளை ஆரம்பிக்கும்படி குரும்பசிட்டி சன்மார்க்க சபையினர் வேண்டுகோள்விடுத்துள்ளனர்.

இது சம்பந்தமாக இச் சபையினர், துணை வேந்தரிடம் கையளித்துள்ள மகஜரில் மேலும் பாடசாலைகளில் கட்டாய பாடமாகவும், விருப்பத்திற்குரிய பாடமாகவும் சித்திரம் இருக்கின்றபோதும் அத்துறையில் டிப்ளோமா பெறுவதற்கான வாய்ப்பு இல்லாமல் இருப்பதையும், பாடசாலைகளில் இவற்றைப் போதிக்கும் ஆசிரியர்களின் ஆற்றலை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டும் மாணவர் மத்தியில் சித்திரக் கல்வியின் தரத்தை உயர்த்துவதற்காகவும் இப்புதிய பயிற்சிநெறியை ஆரம்பிக்கும்படிசுட்டிக்காட்டியுள்ளனர்.

அத்துடன் களனிப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ள சித்திர நுண்கலைக் கல்லூரியில் நூறு வீதமும் சிங்கள மாணவர்களே அனுமதிக்கப்படுவதால் தமிழ் மாணவர்கள் தமிழ் மொழி மூலம் டிப்ளோமாப் பட்டத்தைப் பெறுவதற்கு வாய்ப்பாக இராமநாதன் நுண்கலைக் கல்லூரியில் சிற்பம், சிததிரம் ஆகிய துறைகளையும் ஆரம்பிக்கும்படி கோரப்பட்டுள்ளது. சித்திர ஆசிரியர்களுக்கான பயிற்சிப் பாடசாலை கிராகமவில் தனியே சிங்கள ஆசிரியர்களுக்கு மட்டுமே பயன் தருவதும் அம் மகஜரில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பல நோ. கூ. சங்கம் வரையுள்ளது

## பதவி வெற்றிடங்கள்

பின்வரும் பதவி வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு, விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| பதவி | சம்பளஅளவுத் திட்டம் | | வயதுஎல்லை |
|---|---|---|---|
| 1. கிளைமுகாமையாளர் | 208.11 | - 805 - 1260 25x7, 35x8 | 25-40 |
| 2. எழுதுநர் | 302.13 | 730 - 1055 20x10, 25x5 | 20-40 |
| 3. காசாளர் | 306.11 | 805 - 1260 25x7, 35x8 | 20-40 |

விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்படும் முடிவுத்திகதி - 10-08-1992

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் முடிவுத்திகதி - 12-8-92

சங்கப்பணியாளர்கட்கும், சங்க எல்லைப்பரப்பில் வசிப்பவர்கட்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

சங்கத்தில் ரூபா 10- செலுத்திப் பெறப்படும் விண்ணப்பப் படிவத்திலேயே விண்ணப்பம் செய்தல் வேண்டும். மேலதிக விபரங்கட்கு 291, ஸ்ரான்லி வீதியில் இருக்கு எமது தலைமை அலுவலகத்தில் தொடர்புகொள்ளவும்.

291, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
1-8-92

பொது முகாமையாளர்.

(சி-4809)

### பீற்றர் சல்க் உரையாற்றுகிறார்

சைவ சித்தாந்த ஆய்வு வட்டத்தினரால் நடத்தப்படும் வாராந்தக் கருத்தரங்கில் எதிர்வரும் புதன் கிழமையன்று சுவீடன் உப்சலா பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் பீற்றர் சல்க் "தமிழ்ப் பெளத்தம் பயில்கையில் எதிர்கொள்ளும் சிக்கல்கள்" என்னும் தலைப்பில் உரையாற்றவுள்ளார்.

இவ் ஆய்வுரை புதன்மாலை நான்கு முப்பது மணியளவில் பிரதான வீதியிலிருக்கும் திருமறைக்கலா மன்றத்தின் கேட்போர் கூடத்தில் இடம் பெறும்.

# நினைவு கூருகின்றோம்... 1992 - 08 - 02

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் மன்னார் அடம்பன் பகுதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடி விபத்தில் எம்மைப் பிரிந்த -

**சுனில்** (யோசப் குரூஸ் பெனடிற் - சிறுகுளம், பரப்பாங்கண்டல், மன்னார்)

**விசு** (லிங்கநாதன் - மாளிகைத்திடல், முருங்கன், மன்னார்)

**சங்கர்** (வேலுப்பிள்ளை செல்வம் - 5-ம் கட்டை, மன்னார்)

**விசுவநாத்** சுந்தரம்பிள்ளை ஞானேந்திரன் - வட்டக்கண்டல், மன்னார்)

**திபி** (ஜெறேண்மோஸ் அனெக்லிக்டஸ் - வங்காலை, மன்னார்)

**காந்தன்** (செல்வராசா காந்தன் - அடம்பன், மன்னார்)

**சசி** (றேமன் ஜேரண்லெஸ்பி - அடம்பன், மன்னார்)

1988 ஆம் ஆண்டு மநதங்கேணியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**வரதன்** (சச்சிதானந்தசிவம் சின்னத்தம்பி - மாமுனை, வடக்கு. செம்பியன்பற்று)

1989 ஆம் ஆண்டு இத்தினத்திலிருந்து வல்வெட்டித்துறை தீருவில் பகுதியில் மூன்று தினங்களாக இந்தியப் படையினர் மேற்கொண்ட அட்டூழியங்களின்போது படுகொலை செய்யப்பட்ட குழந்தைகள், சிறுவர்கள். பெண்கள் உட்பட 70 க்கும் மேற்பட்ட தமிழர்கள்.

அரியாலையில் இந்தியப் படையினரால் கைதுசெய்யப்பட்டு பின்னர், உறவினர்களிடம் சடலமாக ஒப்படைக்கப்பட்ட தமிழ் இளைஞன்.

1990 ஆம் ஆண்டு மட்டக்களப்பு புல்லுமலைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய -

**தனம்** (37-ம் குடியிருப்பு, மட்டக்களப்பு)

திருக்கோணமலை, ஜெயபுரப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய —

**லெப். சுந்தர்** (இராமசாமி சதாசிவம்-கப்பல்துறை, திருக்கோணமலை.)

**குட்டி** (கந்தையா விநாயகமூர்த்தி - தம்பலகமம், திருக்கோணமலை)

**ரஞ்சித்** (பொன்னையா அன்ரன் சகாயகுமார் - சீனன்குடா, திருக்கோணமலை)

**தயாளன்** (நல்லலிங்கம் கிருபானந்தம் - வர்ணமேடு, தம்பலகமம், திருக்கோணமலை)

**சுகந்தன்** (க. ஆனந்தராசா - கட்டைபறிச்சான், மூதூர், திருக்கோணமலை)

கிளிநொச்சி - பரந்தன் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**சிவன்** (தில்லையம்பலம் சிவனேசன் - சிவன்கோயில் வீதி, உருத்திரபுரம், கிளிநொச்சி)

**இன்று கொடிச் சீலை எடுத்து வரப்படும்**

வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு கொடிச் சீலை வழமைபோல் சட்டநாதர்வீதியில் எழுந்தருளியிருக்கும் வேல் முருகன் ஆலயத்திலிருந்து இன்று காலை அழகிய சித்திரத்தேரில் மேளவாத்தியங்களுடன் நல்லைக் கந்தன் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்படவுள்ளது.

### முரல் மீன் பாய்ந்து மீனவர் காயம்

(யாழ்ப்பாணம்)

அரியாலைக் கடலில் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்மீது முரல்மீன்பாய்ந்ததில்மீனவர் ஒருவர் பலத்த காயமடைந்திருக்கிறார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தின்போது நவநீதன் (வயது 18) என்பவர் கையில் பலத்த காயமடைந்துள்ளார். இவர் தற்போது யாழ். போதனா மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருகிறார். (க)

### முதலாம் ஆண்டு நினைவலைகள்



வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மன் கோவில்

### பெற்றோர்தினமும் பரிசளிப்பும்

மேலைப் புலோலி சைவப் பிரகாச வித்தியாலயத்தில் பெற்றோர் ...

முத்துமாரி அம்மன் கோவில்

## வருடாந்த உற்சவம்

இராணுவ நடவடிக்கையால் பெருமளவில் அடியார்களும், அந்தணகுல பெருமக்களும் இடம் பெயர்ந்துள்ளதால் மேற்படி ஆலய வருடாந்த உற்சவம் நடைபெறவில்லை. விரதம் அனுஸ்டிக்கும் அடியார்களின் நலன் கருதி இவ் விளம்பரம் பிரசுரிக்கப்படுகிறது.

கொடியேற்றம்:- 03 08.199
தேர்:- 12 08.1992
தீர்த்தம்:- 13. 8.1992
பூங்காவனம்:- 14.08.199

அறங்காவலர் சபை

ந. ஜெகநாதன். தலைவர்
பொ. மாசிலாமணி. முகாமையாளர்
இ. தியாகராசா செயலாளர்

குறிப்பு:- 12-08-1992 புதன்கிழமை திருநெல்வேலி அருள் மிகு முத்துமாரி அம்மன் ஆலயத்தில் அடியார்களால் ஒரு அலங்காரத் திருவிழா ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

(சி 4808)

---

'உளவளத்துணை நிலையம்' நடாத்தும்

குறுகியகால உளவளத்துணை

## பயிற்சித் திட்டம்

இப் பயிற்சியைத் தொடர விரும்புவோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப் பயிற்சி வார இறுதி நாட்களில் ஆங்கில மொழி மூலம் நடாத்தப்படும். கிளிநொச்சி, வவுனியா, மன்னார் பகுதிகளிலிருந்து விண்ணப்பிப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்,

விண்ணப்பப்படிவங்களைப் பெற விரும்புவோர் :

'சாந்தியகம்'
15, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்குக் கடிதமூலமாகவோ, நேரடியாகவோ தொடர்பு கொள்ளவும். விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய இறுதித் திகதி ஆகஸ்ட் 20 - 1992 ஆகும்.

– நிறைவேற்றுப் பணிப்பாளர்

(2928)

---



## வீரவேங்கை இராமன்

(சத்திவேல் ஸ்ரீபாலகிருஷ்ணன்)

| அன்னையின் அரவணைப்பில் | கட்டைக்காட்டின் வரலாறாய் |
| --- | --- |
| 17-03-1972 | 1/-07-1991 |

திதி : 03 - 08 - 1992 திங்கட்கிழமை

இராமன் என பெயர் ஏற்றாய்
அயோத்தி இராமனாக கட்டைக் காட்டினிலே
உன் வீரம் எமக்குக் காட்டினாய்
பால் மணம் மாறாப் பாலன் என நாம் இருந்தோம்
நீயோ வல்வை மண்ணின் வீரத்தை உலகறிய வைத்தவர்களில் ஒருவனாய்
எம் சேனைத் தலைவன் வழிகாட்டலில் நாடுகாக்கும் போரினிலே
பாலுக்நட்டி நீயும் தமிழ் ஈழம் என்னும் உயிர்மூச்சில்
கட்டைக்காட்டினிலே உரமாகி மூச்சடக்கினாய்
மலர்ந்து வரும் தமிழ் ஈழத்தில் நீ எமக்கு
என்றும் வாடாத பாரிஜாத மலரடா
உன் இலட்சியம் தமிழ் ஈழம் அது விரைவில் கிடைத்தே தீரும் இது நிச்சயமடா.

இவருடன் வீரச்சாவடைந்த
அனைத்து மாவீரர்களுக்கும் எமது வீரவணக்கங்கள்.

நாளை 03 - 08 - 1992 இல்
அன்னாரின் முதலாவது சிரார்த்த தினத்தில்
போராளிகள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.
யாவரையும் பங்குபற்றுமாறு
தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

-குடும்பத்தினர்

'ஸ்ரீபவனம்'
திருவில் தெரு,
வல்வெட்டித்துறை.

(2933)

---

பெற்றோர் தினமும் 113ஆவது வருடாந்த பரிசளிப்பு விழாவும் அதிபர் திரு. ந. சிவபாதசுந்தரம் தலைமையில் நடைபெற்றது.

இவ் விழாவின்போது வைத்திய கலாநிதி திரு. எம். கே. முருகானந்தன் புதிய நூல் நிலையம் ஒன்றை திறந்து வைத்தார். இவ் வைபவத்தில் வடமராட்சி பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். செல்லத்துரை உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு.எஸ். ஏகாம்பரநாதன். கொத்தணி அதிபர் திருமதி லோ. குமாரசாமி மற்றும் பலரும் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினர்.

வரவேற்புரையை திருமதி . பொன்னையாவும், நன்றியுரையை திரு. ஆ. க. நடராசாவும் நிகழ்த்தினார்கள்.

(82)

ஊக்குவிப்புக்

## கொடுப்பனவு இல்லை

(கொழும்புத்துறை)

காங்கேசன்துறை மயிலிட்டி மார்புநோய் வைத்தியசாலையைச் சேர்ந்த 35 ஊழியர்களுக்கு கடந்த இரண்டு வருடங்களாக ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை எனப் புகார்கள் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

சிறிலங்கா இராணுவ நடவடிக்கையால் இந்த வைத்திய சாலை இயங்காத போதும், அங்கு கடமையாற்றிய ஊழியர்கள் தற்போது யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, பளை ஆகிய அரசினர் வைத்தியசாலைகளில் கடமை புரிகிறார்கள்.

இவ் வைத்தியசாலைகளில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு சீருடை வழங்கப்படுவதும் தற்போது நிறுத்தப்பட்டுள்ளதாகத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

(24)

---

ஜெனின் (தி. ஜெயந்திரன் - குஞ்சுப்பரந்தன், பரந்தன், கிளிநொச்சி)

இதே பகுதியில், சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய -

**மெண்டிஸ்** (மங்களம் சந்திரசேகரம்-4-ம் வாய்க்கால், கிளிநொச்சி)

வசாவிளானில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வாகன விபத்தில் எம்மைப்பிரிந்த

**மேஜர் சூட்டி** (சீவரத்தினம் சிறிதரன் - தையிட்டி, காங்கேசன்துறை)

முல்லைத்தீவில், சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய -

**மூர்த்தி** (தம்பிராசா ஆனந்தராசா - வராத்துப்பளை, பருத்தித்துறை)

அம்பாறை, பொத்துவில் இடம் பெயர்ந்தோர் முகாமிற்குள் புகுந்த 'ஜிகாத்' குழுவினரால் வெட்டிக் கொல்லப்பட்ட 15 தமிழர்கள் கோமாரி இடம்பெயர்ந்தோர் முகாமில் வைத்து சிறிலங்காப் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போன பொத்துவிலைச் சேர்ந்த 26 தமிழர்கள்.

மட்டக்களப்பு - சித்தாண்டி முருகன் கோயில் இடம் பெயர்ந்தோர் முகாமில் சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு செங்கலடிமுகாமில்வைத்து உயிருடன் தீமூட்டிக் கொல்லப்பட்ட 10 தமிழ் இளைஞர்கள்- தன்னாமுனையில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் கொல்லப்பட்ட 2 தமிழர்கள் -வாழைச்சேனையில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 7 தமிழர்கள்.

திருக்கோணமலை - சுங்கான் குழிப் பகுதியில் முஸ்லிம் ஊர்காவல் படையினரால் வெட்டிக் கொல்லப்பட்ட தமிழ்ப் பெண்.

கிளிநொச்சி - பரந்தன் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

1991 ஆம் ஆண்டு மட்டக்களப்பு - கன்னிச்சை, வடமுனைப் பகுதி முகாமிலிருந்து வெளியேறிய சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**லெப். ஜெயந்தன்** (வினாயகமூர்த்தி விஜயகுமார் கடற்கரை, திருக்கோயில், அம்பாறை.)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

## தமிழீழ விடுதலைப் புலிகள்

[சி/4804]

### சிந்தனைக்கு

மோசடிகளில் முதல் மோசடி மிகக் கொடிய மோசடி, தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்வது.

— கெமேலயெல் பெய்லி

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 02- 08- 1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05

## பிரச்சினை தமிழருடையது

தமிழர் தேசிய இனப் பிரச்சினை தொடர்பாக சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா கடைப்பிடித்து வந்த கொள்கை தோல்வியில் முடிவடைந்தமையால் தற்பொழுது அரசியலில் ஒரு மந்தநிலை தோன்றியுள்ளதாக கொழும்பிலுள்ள அரசியல் அவதானிகள் கருதுகின்றார்கள்.

திரு. பிரேமதாசா அரசாங்கம் இரட்டை அணுகுமுறைக் கொள்கையைக் கடைப்பிடிப்பதாகவும், இது ஒருபோதும் வெற்றியளிக்கப் போவதில்லை எனவும் இப்பகுதியில் பலமுறை சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. ஆனால், கொழும்பிலுள்ள அரசியல் விமர்சகர்கள் பலரும், சில அண்டை நாட்டு இராஜதந்திரிகளும், பத்திரிகையாளர்களும் சிறிலங்கா அரசாங்கத்தின் இவ் அணுகுமுறையின் வெற்றி குறித்துப் பெரும் நம்பிக்கை கொண்டிருந்தனர். இது இலங்கையின் அரசியல் குறித்து அவர்கள் கொண்டிருந்த தவறான மதிப்பீட்டின் வெளிப்பாடாகும்.

ஆனால் இவ் இரட்டை அணுகுமுறைக் கொள்கை தோல்வியில் முடிவுற்றமைக்கு சிறிலங்கா அரசாங்கத்தின் தவறான கணிப்பீடே காரணமாகும். வெளிப்படையாகத் தமது அரசியல் அணுகுமுறையை இரட்டை அணுகுமுறைக் கொள்கையாக சிறிலங்கா அரசாங்கம் காட்டிக்கொண்டபோதும், அது இராணுவத் தீர்விலேயே நம்பிக்கை கொண்டிருந்தது. அரசியல் தீர்வில் நாட்டம் கொள்ளவில்லை. விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாகத் தோற்கடிப்பதன் மூலம் அரசியல் தீர்வு என்ற ரீதியில் ஓர் திட்டத்தைத் திணிக்கலாம் என்றே சிறிலங்கா அரசு எண்ணுகிறது.

இதன் வெளிப்பாடே இராணுவத் தீர்விற்குரிய வழிகளில் முனைப்புடன் செயலாற்றிய சிறிலங்கா அரசாங்கம் அரசியல் தீர்வு குறித்து முனைப்புடன் செயற்படவில்லை. இராணுவத்திற்கென டாங்கிகளையும், விமானங்களையும், பீரங்கிப் படகுகளையும் கொள்வனவு செய்த சிறிலங்கா அரசாங்கம் இனப் பிரச்சினைத் தீர்வு குறித்து ஆராய்ந்த பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் முன் தீர்வுத் திட்டம் எதையும் முன் வைக்கவில்லை.

# தென் ஆசிய அரசியலில் அமெரிக்கா விசேட கவனம்

## இராஜதந்திர அணுகு முறையிலும் மாற்றம்

தெற்காசிய பிராந்தியத்தின் எதிர்காலத்துக்கு நான்கு அடிப்படை அம்சங்கள் மிகவும் இன்றியமையாதனவாகும். ஜனநாயகம், மனித உரிமை, இராணுவ மயமற்ற தன்மை, அபிவிருத்தி என்ற நான்கு அம்சங்களிலுமே இந்தப் பிராந்தியத்தின் எதிர்காலம் தங்கியிருக்கிறதென்ற கருத்தைத் தெரிவித்தார் அமெரிக்க செனட் வெளியுறவுக் கமிட்டியின் ஆலோசகரும் அதிகாரியுமான பீட்டர் கல்பிரித் கடந்த மாதம் வாஷிங்டனில் செனட் அலுவலகத்தில் சந்தித்த போது இந்தத் தகவலைச் சொன்னார்.

### கல்பிரித்

''கல்பிரித்'' என்ற பெயர் இந்திய அரசியல்வாதிகள், இராஜ தந்திரிகள், அறிஞர்கள் மத்தியில் நன்கு அனுபவப்பட்ட பெயராகும். அதே போன்று அமெரிக்க இராஜ தந்திரத்துறையைச் சார்ந்தவர்கள் மத்தியில் மிகப் பிரசித்தி பெற்ற பெயராகும். ஜோன் கல்பிரித் என்பவர் இந்தியாவில் அமெரிக்கத் தூதுவராக இருந்தவர். நேரு குடும்பத்தவர்களது நண்பர். இந்தியாவின் அரசியல், பொருளாதாரம்,' சமூக, கலாசாரங்களை நூலாக எழுதி அமெரிக்க மக்கள் மத்தியில் இந்தியாவைப் பற்றிய விழிப்புணர்விற்கு வழி செய்தபிரசித்திபெற்ற இராஜ தந்திரி ஆவார். அமெரிக்க - இந்திய உறவு மிக மோசமாக சீர்குலைந்திருந்தபோது வலுவான உறவை ஏற்படுத்துமாறு அமெரிக்காவிலிருந்து அப்போதைய ஜனாதிபதி ஜோன் எப். கென்னடியினால் (1961-1963) அனுப்பப்பட்ட தூதுவரே ஜோன் கல்பிரித். அவரது புதல்வரான பீட்டர் கல்பிரித் இப்போது செனட்வெளியுறவுக் கமிட்டியின் அதிகாரியாகவும், ஆலோசகராகவும் செயற்பட்டுக் கொண்டிருக்கிறார். ஆசிய மத்திய கிழக்கு விவகாரங்களில் நிபுணத்துவம் பெற்ற அவர் வளைகுடா நெருக்கடிக்கு முன்னரும் பின்னரும் அரச அலுவல் நிமித்தம் மத்திய கிழக்கில் பல நாடுகளுக்குச் சென்றார். ஈராக் வ'-பகுதியில் குர்திஷ் மக்களது நிலைமை தொடர்பாக நல்ல அனுபவம் மிக்கவரான பீட்டர் கல்பிரித்தைமேற்காசியாவில் அமெரிக்காவின் வெளிநாட்டுக்கொள்கைஎன்ற தலைப்பிலானநிகழ்ச்சித்திட்டத்தில் பங்கேற்க வந்த தெற்காசிய பத்திரிகையாளர்கள் பல்கலைக்கழக அரசியல் பேராசிரியர்கள் சந்தித்தனர். அப்போதே அவர் மேற்கண்ட கருத்தை முன்வைத்தார்.

இந்த சந்திப்பை விட மேலதிகமாக பாகிஸ்தானிய குயிட் அசாம் பல்கலைக்கழகத்தின் சர்வதேச உறவுகள் கற்கைக்கான பிரிவின் உதவி அரசியல் விஞ்ஞான பேராசிரியர் செய்யட் நிபாட் ஹுசைனுக்குப் பேட்டி அளித்தார். அந்தப் பேட்டியின் போது பாகிஸ்தான் ஒரு முன்னணி நாடாகும் என்ற கருத்துக்கே இப்போது இடமில்லை அப்படி கருதப்படவும் முடியாதென்று குறிப்பிட்டுள்ளார்

அமெரிக்காவின் வெளியுறவுக்கொள்கையைப் பொறுத்த வரையில் தெற்காசியப் பிராந்தியத்தை நோக்கியதான அணுகுமுறையில் இப்போது ஒரு மாற்றம் தென்படுகிறது. ஒரு காலகட்டத்தில் இப் பிராந்தியத்தில் பாகிஸ்தானை ஒரு தலைமை முன்னணி நாடாகவே அமெரிக்கா கருதி வந்தது. இப் பிராந்தியத்தில் ஆயுதப்போட்டி ஏற்படவும் பின்னர் சோவியத் — இந்திய உறவு பிராந்தியத்தில் வலுவடைவதற்கும் அமெரிக்காவே காரணகர்த்தாவாக இருந்தது என்பதை எவராலும் மறுக்க முடியாது. ஆனால் இப்போதைய' அணுகுமுறையில் ஒரு மாற்றம் தென்படுகிறது. இப் பிராந்தியத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து '' தெற்காசிய பணியகம்' வாஷிங்டன் வெளியுறவு இலாகாவில் அண்மைக் காலத்தில் இயங்கத் தொடங்கி யிருக்கிறது. இது ஒரு வகையில் அமெரிக்கா இப் பிராந்தியத்தில் முன்னரை விட கூடுதலான அக்கறை கொண்டுள்ளதென்பதை சூசகமாக உணர்த்துவதாக இராஜதந்திரிகளும் அரசியல் ஆய்வாளர்களும் கருதுகிறார்கள்.

ஒரு காலகட்டத்தில் குறிப்பாக (1950—1960) அமெரிக்காவின் மேற்கு நாட்டுக் கொள்கைக்குப் பாகிஸ்தான் ஆதரவளித்தது சீன—சோவியத் கம்யூனிஸக் கொள்கை விரிவுபடாதிருக்க பாகிஸ்தான் அமெரிக்காவுக்கு ஆதரவளித்தது. அதன் பின்னர் சோவியத் படைகள் ஆப்கானிஸ்தானுக்குள் நுழைந்த (பிரெஷ்னேவின் சதாப்தம் 1979) காலகட்டத்தில் பாகிஸ்தான் மீண்டும் ஒரு முன்னணி நாடாக அமெரிக்காவினால் உருவாக்கப்பட்டது. அதாவது 1980க்குப் பின் சோவியத் அச்சுறுத்தல் தெற்காசியாவில் ஏற்படாதவாறு தவிர்ப்பதில். இப்போது கெடுபிடி யுத்தம் முடிவடைந்து விட்டது. சோவியத் அச்சுறுத்தல் என்ற நிலைமை இப்போதில்லை. ஆப்கானிஸ்தானிய விவகாரத்தில் எவருக்குமே இப்போது அக்கறையில்லை. எனவே பாகிஸ்தானும் தலைமை முன்னணி நாடு என்ற நிலைப்பாட்டிலிருந்து மறைந்து போயிருப்பதை அவதானிக்க முடிகிறது.

இந்த நிலையில்தான் தெற்காசிய அமெரிக்க உறவில் முக்கியமானதென்றார் பீட்டர் கல்பிரித். சனத்தொகைப் பளு, பொருளாதாரச்சுமை, சூழல் சுற்றாடல் பிரச்சினை என்பன தெற்காசியப் பிராந்தியத்தைப் பொறுத்தவரை மிக முக்கிய பிரச்சினைகளாக இருப்பதையும் பீட்டர் கல்பிரித் சுட்டிக் காட்டினார்.

மூன்றாம் மண்டல நாடுகளின் சகல பிரச்சினைகளும் தெற்காசியாவில் பூதாகரமாக உருவெடுத்திருப்பதை அவர் விபரித்தார். அதிக சனத்தொகை, சூழல் சுற்றாடல் பிரச்சினை, அகதிகள் நெருக்கடி, இனமோதல்கள், சமய மோதல்கள் என்பன இப்பிராந்தியத்திலேயே பூதாகரமாக காணப்படுகிறது.

தெற்காசியப் பிராந்தியத்தில் உலக சனத்தொகையில் மூன்றில் ஒரு பகுதியினர் வாழ்ந்து கொண்டிருப்பதாக குறிப்பிட்ட பீட்டர் கல்பிரித் இங்கு அதிகரித்து வரும் வறுமை சனத்தொகை அதிகரிப்பு நெருக்கடிகளைக் குறைப்பதற்கு அமெரிக்கா ஒத்துழைத்து வருவதாகவும் சொன்னார்.

**கண சுபாஷ்**
**-சந்திரபோஸ்**

இந்தியா தனது மொத்த தேசிய உற்பத்தியில் மூன்று வீதத்தை பாதுகாப்புத்துறைக்குச் செலவிடுகிறது. இதே போன்று பாகிஸ்தான் பத்து முதல் பதினைந்து வீதத்தைச் செலவிடுகிறது. இவ்வாறு செலவிடுவதால் இந்தியாவும் பாகிஸ்தானும் தமது வளங்களைச் செலவழித்து பலவீனமடைகின்றன. இந்தியாவுக்கு உண்மையான அச்சுறுத்தல் காஷ்மீர் பஞ்சாபிலிருந்து வரவில்லை. வறுமையே பிரதான அச்சுறுத்தல் ஆகும். பாகிஸ்தானும் அப்படியே. தெற்காசியா இராணுவ மயப்படுத்தலில் இருந்து தவிர்க்கப்பட வேண்டும். என்பதே எமது குறிக்கோளாகும் என்றும் பீட்டர் கல்பிரித் விபரித்தார்.

### பாகிஸ்தானின் நிலைமை

தெற்காசியாவின் எதிர்காலத்தை நான்கு முக்கிய கூறுகள் தீர்மானிப்பதாகக் கூறிய பீட்டர் கல்பிரித் ஜனநாயக நீரோட்டத்தில் பாகிஸ்தான் மிக நெருக்கடியான கட்டத்தில் நின்று கொண்டிருக்கிறதென்று சுட்டிக் காட்டினார்.

1988 ஆம் ஆண்டு ஜனநாயக அரசாங்கம் தெரிவானபோதிலும் கூட அதிகாரத் தன்மையை நிரூபிப்பதில் சங்கடங்கள் எதிர்நோக்கப்பட்டன.

ஏனெனில் இராணுவத்திடமே அதிகாரம் இருந்தது. இது ஜனநாயகத்துக்கு நேரடி அச்சுறுத்தலாகும். ஜெனரல் ஷியா உல்ஹக் இதையே செய்தார். அதற்கு முன்னர் ஜெனரல் அயூப்கானும் இதையே செய்தார். இன்னொரு வகையில் புதிய அச்சுறுத்தலும் ஏற்படலானது. இராணுவ வரவு செலவுத் திட்டத்தைச் சிவில் நிர்வாகியான அரசியல்வாதி ஒருவரினால் கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டது.

அப்படிக் கட்டுப்படுத்தும் போது இராணுவப் புரட்சி ஏற்படக் கூடும். இந்த நிலைமையில் நாட்டின் வளங்கள் பாதுகாப்புத் துறைக்கே சென்று விடுகிறது. பாகிஸ்தானைப் பொறுத்தவரையில் நாட்டின் நிர்வாகத்தில் பாரிய பங்களிப்பை இராணுவம் வகிக்கிறதென்றும் செனட் வெளியுறவுக் கமிட்டியின் ஆலோசகர் பீட்டர் கல்பிரித் சுட்டிக் காட்டினார்.

காஷ்மீர் விவகாரமே இந்திய - பாகிஸ்தானிய நெருக்கடிக்கு காரணமென்று நினைக்கவில்லை. 1971 இல் ஏற்பட்ட யுத்தமானது காஷ்மீர் காரணமாக ஏற்படவில்லை.

காஷமீர் விவகாரத்தை ஐ. நா. பாதுகாப்புச் சபைக்கு கொண்டு செல்லாது சிம்லா உடன்படிக்கைக்கு அமைய பேசித் தீர்க்கவேண்டும் என்று இந்தியா விரும்புகிறது. ஆனால் பாகிஸ்தான் அப்படி நினைக்கவில்லை.

இருநாடுகளும் பேசித்தீர்ப்பதன் மூலமே பிரச்சினைகளுக்கு தீர்வுகாணமுடியும் என்றும் பீட்டர் கல்பிரித் சுட்டிக் காட்டினார்.

-நன்றி வீரகேசரி

### ஃபேர் குரோஜ் கம்பெனியில்

# 800 ரூபா பெறுமதியான பங்குகளை 10 ரூபாவுக்கு வாங்கினார் சிதம்பரம்

### பங்கு சந்தை ஊழலில் புதிய தகவல்

### சீனாவிலும் நேபாளத்திலும்

# இருவேறுவிமான விபத்துகள் 213 பேர் பலி, 26பேர் காயம்

(பெய்ஜிங்)

சீனாவின் ஜாவ் 112 ரக விமானம் ஒன்று நேற்று முன்தினம் கிழக்கு சீனாவில் நான்யென் விமான நிலையத்தில்

கொக்கிலிருந்து புறப்பட்ட அவ்விமானம் காட்மண்டு நோக்கிப் பறந்து கொண்டிருந்தது. விபத்து நேரிட்ட இடத்

திட்டம் எதையும் முன் வைக்கவில்லை.

புலிகள் இராணுவ ரீதியாக அடக்கப்படுவார்கள் எனின் அரசியல் தீர்வுத் திட்டம் ஒன்று தேவையே இல்லை என சிறிலங்கா அரசாங்கம் எண்ணியது. ஆனால் சிறிலங்கா அரசாங்கத்தின் இராணுவ ரீதியான கணிப்பீடு தவறியமை காரணமாக இன்று புதிய நெருக்கடி நிலை ஒன்று உருவாகியுள்ளது. அதாவது அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து அரசாங்கம் குழம்பிப் போயுள்ளது.

இதேவேளை, விடுதலைப்புலிகள் இராணுவரீதியாக அடக்கப்பட்டுவிடுவார்களோ என்ற அச்சம் கொழும்பிலுள்ள தமிழ்க்குழுக்களுக்கு ஏற்பட்டதன் காரணமாக, யாழ்ப்பாணத்தின்மீது இராணுவம் இறுதித் தாக்குதலை ஆரம்பிப்பதற்கு முன்னர் தமது அரசியல் நிலைப்பாட்டை உறுதிசெய்து கொள்ள அவை முயற்சித்தன. இதன் காரணமாக வடக்கு-கிழக்கு இணைப்பிற்கு விட்டுக்கொடுப்பிற்கு இடமில்லை என்ற நிலைப்பாட்டை அவர்கள் கட்டாயம் எடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டது.

சிங்களப் பேரினவாத சக்திகள் பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் நடவடிக்கைக்குப் போட்ட முட்டுக்கட்டைகளுடன், தமிழ் குழுக்களின் அரசியல் உயர் வாழ்க்கைக்கு அத்தியாவசியமாக இருந்த வடக்கு-கிழக்கு இணைப்புகோரிக்கையையும் பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் நடவடிக்கைகளையும் முடக்கமடையச் செய்தன. இதனால், சிங்கள கட்சிகள் - தமிழ்குழுக்கள் - முஸ்லிம் காங்கிரஸ் என மும்முனையில் முரண்பாடுகள் உருவாகின. இதன் காரணமாக அரசிற்கு பெரும் தர்ம சங்கடமான நிலைஏற்பட்டது. அரசியல்தீர்வை பாராளுமன்ற தெரிவுக்குழு முன்வைக்குமென அரசு செய்துவந்த பிரசாரத்திற்கு முட்டுக்கட்டை ஏற்பட்டது. அதாவது திரு. பிரேமதாசா கூட்டிய சர்வகட்சி மாநாடு போன்றுபாராளுமன்றத் தெரிவுக்குழுவும் எதுவித முன்னேற்றமும் ஏற்படாமல் முடங்கிப்போயுள்ளது.

இதனைப்பாடமாகக் கொண்டாவது சிறிலங்கா அரசாங்கம் ஒன்றைப் புரிந்து கொள்ளவேண்டும். இனப்பிரச்சினைக்கான தீர்வை தான் விரும்பியவாறு இழுத்துச் செல்லவோ அன்றி ஏற்படுத்திவிடவோ முடியாது. அதாவது தமிழரின்பிரச்சினை தமிழ்மக்களின் கோணத்தில் இருந்து பார்க்கப்படவேண்டும். அதற்கு தீர்வு காணப்படவேண்டும்.

(டில்லி)

ஃபேர் குரோஜ் கம்பெனியின்பங்குகள் சந்தையில் எண்ணூறு ரூபாவாக இருந்தபோது அமைச்சர் சிதம்பரமும் அவரது மனைவியும் அவற்றை பங்குகளின் உண்மைப் பெறுமதியான பத்து ரூபாவுக்கே கொள்வனவு செய்துள்ளனர் என்று தெரியவந்துள்ளது.

இந்தியாவின் மிகப் பெரும் பங்குச் சந்தை மோசடிகளில் அமைச்சர்கள் சிலரும் சம்பந்தப்பட்டிருப்பதாக செய்திகள் வெளியானதையடுத்து மத்திய வர்த்தக அமைச்சர் ப. சிதம்பரம் தமது பதவியைத் துறந்தது தெரிந்ததே.

ஆனால் தன்னுடன் சம்பந்தப்பட்ட விடயத்தில் தவறோ சட்டவிரோதமான செயலோ எதுவும் இல்லை என்று கூறியிருந்த அமைச்சர் சிதம்பரம் தானும் தனது மனைவியும் சுமார் இரண்டரை லட்ச ரூபாவை முதலீடு செய்திருந்ததாக மட்டுமே குறிப்பிட்டிருந்தார். அத்துடன் இந்தச் சிறிய முதலீடு அரசுக்கு சங்கடத்தை ஏற்படுத்துமாயின் தான் பதவியைத் துறப்பதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

எனினும் சுமார் இரண்டரைக் கோடி ரூபா பெறுமானமுள்ள பங்குகளை இரண்டரை லட்சம் ரூபாவிற்கு சிதம்பரமும் அவரது மனைவியும் கொள்வனவு செய்திருந்தனர் என்பது தற்போது அம்பலமாகியுள்ளது.

விபத்திற்கு உள்ளாகியது. விமானம் விழுந்துநொருங்கிய இச்சம்பவத்தின் போது அதிலிருந்த நூறு பயணிகள் உயிரிழந்ததுடன் மற்றும் இருபத்தாறு பயணிகள் காயமடைந்துள்ளனர்.

இவ் விமானம் புறப்பட்ட சிறிது நேரத்திலேயே வெடித்துச் சிதறி தீப்பற்றிக் கொண்டது.

இதேவேளை தொண்ணூற்று ஒன்பது பயணிகளையும். பதின்நான்கு சிப்பந்திகளையும் ஏற்றிச்சென்ற தாய்விமானக் கம்பெனியின் ஏயார் பஸ் விமானம் ஒன்று நேற்று முன்தினம் மத்திய நேபாளத்தில் விழுந்து நொருங்கியது பாங்

திற்கு மீட்புப்பணிக்குழுவினர் விரைந்து அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர். காட்மண்டுவிலுள்ள திரிபுவன் விமான நிலையத்துடன் இவ் விமானம் கடைசியாக தொடர்பு கொண்டிருந்தபோது காட்மண்டுவிலிருந்து பதின்நான்கு நாட்டிக்மைல் நொலைவில் பதினோராயிரத்து ஐநூறு அடி உயரத்தில் பறந்து கொண்டிருந்தது. இந்த விமான விபத்தில் எவரும் உயிர் பிழைத்ததாக இதுவரையில் அறிவிக்கப்படவில்லை.

இஸ்ரேலில்

# ராபின் அரசை எதிர்த்த ஐந்துபிரேரணைகள் தோல்வி

(ஜெருசலேம்)

அரபுப் பிரதேசங்களில் யூதகுடியேற்றங்களை நிறுத்திய இஸ்ரேலின் புதிய அரசிற்கெதிராக ஐந்து எதிர்க்கட்சிகள் ஐந்து நம்பிக்கையில்லாத் தீர்மானங்களை சபையில் கொண்டுவந்தன.

எனினும் இத்தீர்மானம் சபையில் வாக்களிப்புக்கெடுக்கப்பட்ட போது சாதகமாக 48 வாக்குகளும் பாதகமாக 59 வாக்குகளும் கிடைத்ததையடுத்து இத்தீர்மானத்தில் பிரதமர் பிட்ஷாக் ராபினின் அரசு வெற்றிபெற்றது.

யூதகுடியேற்றங்களுக்குப் பதிலாக தேசிய தேவைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்போம் என தேர்தல் விஞ்ஞாபனத்தில் யிட்ஷாக் ராபின் அறிவித்ததுடன் வீடுகட்டுவதற்கு ஏற்படும் பணத்தை பொருளாதார சமூக தேவைகளுக்கு பயன்படுத்தலாம் எனவும் தெரிவித்திருந்தார்.

இதன் முதற்கட்டமாக மேற்குக்கரை காஸா பிராந்தியங்களில் யூதர்களை குடியேற்றுவதற்காக கட்டப்படவிருந்த 7000 வீடுகளை இஸ்ரேலின் புதிய அரசு நிறுத்தியுள்ளதுடன் இப்பிரதேசங்களில் யூதகுடியேற்ற வாசிகளுக்கு முன்னாள் தீவிரவாத யூத அரசு அளித்த சலுகைகளையும் புதிய அமைச்சரவை ரத்துச் செய்துள்ளது.

முன்னாள் பிரதமர் இட்ஷாக் ஹாமிர் சுமார் ஒரு லட்சம் யூதர்களை பாலஸ்தீனிய மக்கள் வாழும் பகுதிகளில் குடியேற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க-லொஸ்ஏஞ்சல்ஸ் நகரில்

# ஒரு மணி நேரத்தினுள் ஐந்து வங்கிகளில் கொள்ளை

அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் ஒருமணி நேர இடைவெளியில் ஐந்து வங்கிகளில் கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளது. வங்கிக் கொள்ளைகள் அடிக்கடி இடம்பெறுவது வழமையாகும். எனினும் இவ்வாறு குறுகியகால இடைவெளியில் கொள்ளைகள் இடம்பெற்றிருப்பது இதுவே முதல் தடவையாகும் என்று சமஷ்டி விசாரணைப்பிரிவு அறிவித்துள்ளது. அமெரிக்க நகரங்கள் வங்கிக் கொள்ளைகளுக்கு பிரசித்தி அடைந்த நகரங்களுள் இந்த நகரம் தற்போது முதலிடத்தை வகிக்கிறது.

சீனாவின் உதவியுடன்

# பாகிஸ்தானில் அணுசக்தி நிலையம் ஐந்து ஆண்டுகளில் பூர்த்தியாகும்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானுக்கு 300 மெகாவாட் அணுசக்தி நிலையத்தின் பணிகள் ஏற்கனவே தொடங்கிவிட்டதாகவும், சீனா அவற்றிற்கான பொருள்களைவிநியோகித்துள்ளது என்றும், இஸ்லாமா பாத்திலிருந்து வரும் பத்திரிகையொன்று கூறுகின்றது.

ப்ரான்டியர் போஸ்ட் என்னும் இஸ்லாமாபாத்திலிருந்து வரும் பத்திரிகை வெளியிட்டுள்ள தகவலில் மேலும் 1000 பொறியியலாளர்களும், தொழில் நுட்பவியலாளர்களும் பாகிஸ்தான்போய் சேர்ந்திருப்பதாகவும், வரும் ஐந்து ஆண்டுகளில் இந்த அணுசக்தி நிலையம் இயங்கத் தொடங்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது பாகிஸ்தானில் இயங்க இருக்கும் இரண்டாவது அணுசக்தி நிலையம் என்பதுடன் முதலாவது அணுசக்தி நிலையம் கனேடிய உதவியுடன் அமைக்கப்பட்டதும் இங்குகுறிப்பிடத்தக்கது.

இதேவேளை பிரான்சின் உதவியுடன் பாகிஸ்தானில் அமைக்கப்படவிருந்த இன்னுமொரு அணுசக்தி நிலையம், பற்றி பிரான்ஸ் அணுசக்தி பரவல் தடுப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதையடுத்து இன்னமும் தீர்க்கமான முடிவு எட்டப்படாமல் இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னாள் அதிபர் கோனேக்கர்

# ஜெர்மன் கொண்டு வரப்பட்டு சிறையில் வைக்கப்பட்டார்

(பெர்லின்)

இரண்டு ஜெர்மனிகளையும் பிரித்த பெர்லின் சுவரைக் கட்டியவரும், பெர்லின் சுவர்களைக் கடந்தவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டமைக்குக்காரணமாக இருந்தவருமான கிழக்கு ஜெர்மனியின் முன்னாள் அதிபர் எரிக்கோனேக்கர் பெர்லினுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

கொர்ப்பசேவ் ஆட்சிக் காலத்தில் மாஸ்கோவில் அரசியல் தஞ்சம் பெற்றிருந்த இவர் பின்னர் சிலி தூதுவரகத்தில் தஞ்சம் புகுந்திருந்தது தெரிந்ததே. 79 வயதான கோனேக்கர் பெர்லினில் கைது செய்யப்பட்டு அங்குள்ள மேர்பிட் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளா

ஈழநாதம்

# தாக்குப்பிடிப்பதிலேயே போராட்ட வெற்றி உள்ளது

## -பாலகுமாரன்

[யாழ்ப்பாணம்]

''எந்தளவிற்கு நாங்கள் தாக்குப் பிடிக்கின்றோமோ அவ்வளவிற்கு நாங்களும் எங்கள் போராட்டமும் வெற்றி பெற முடியும்'' இவ்வாறு நேற்று மாலை தலைமைச் செயலகத்தில் திலீபன் அரங்கில் நடைபெற்ற விடுதலைப்புலிகளின் அரசியல் பிரிவினரினால் மாதாந்தம் தோறும் நடத்தப்படும் கலை நிகழ்வில் கலந்து கொண்டு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பிரமுகர் வே.பாலகுமார் தெரிவித்தார்.

அவர் மேலும் அங்கு உரையாற்றுகையில், ஜே. வி. பி. போராட்டத்தினைத் தாங்கள் ஒழித்து விட்டதாகக் கூறி அதேபோல் எங்கள் போராட்டத்தினை முடிவு கட்டலாம் என எதிரி கனவு கண்டு கொண்டு இருக்கின்றான் இதற்காக அன்று ஜே வி.பி. ஒழிப்பு என்னும் பெயரில் பல ஆயிரக்கணக்கான சிங்கள இளைஞர்களைக் கொன்றார்கள் அதே போன்று அன்றிலிருந்து இன்றுவரை எதிரியானவன் தனது செயற்பாட்டை தமிழ் மக்கள் மீது தீவிரப்படுத்தியுள்ளான் இதனை முறியடிக்க தமிழ் மக்களாகிய நீங்கள் உறுதியாக மனோபலம் உள்ளவர்களாக இருக்க வேண்டும். எதிரியின் பலகதைகளைக் கேட்டு காற்றோடு விட்டுள்ளோம்.

இந்த நூற்றாண்டில் தேசிய இன விடுதலை உணர்வை பிறப்பித்த போராட்டம் இது வரலாறு படைக்க எழுந்த இயக்கம் விடுதலைப் புலிகள். இப்பெருமை தமிழீழ மக்களாகிய உங்களையே சாரும் என அவர் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகள் தொழிற் சங்கப் பொறுப்பாளர் திரு. இமையவன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் விடுதலைப்புலிகள் மகளிர் படைத்துணைப் பொறுப்பாளர் சுகுணா, விடுதலைப் புலிகள் கலைபண்பாட்டுக் கழக துணைப் பொறுப்பாளர் திரு தேவர் ஆகியோர் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினர். தொடர்ந்து கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

## ஆகஸ்ட் 28இல் எதிர்க்கட்சிகள் கூட்டம்

ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவுக்கு எதிராக அரசியல் குற்றச்சாட்டு பிரேரணை கொண்டுவரப்பட்டு ஒருவருடம் பூர்த்திஆவதையொட்டி கொழும்பு பொரளை கம்பெல் பூங்காவில் ஆகஸ்ட் 28இல் நடத்தப்படவிருக்கும் பொதுக் கூட்டத்தில் கலந்துகொள்வதென எதிர்க்கட்சிகள் தீர்மானித்துள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.


வண் – கிழக்கு

கலட்டி எச்சாட்டி மஹா மாரியம்மன்

**மஹோற்சவ விசேட நிகழ்ச்சிகள்**

இன்று (02-08-92)

வழக்காடு மன்றம்

**குற்றக்கூண்டில் தசரத சக்கரவர்த்தி**

நீதியரசர் திரு. இ. ஜெயராஜ்

வாதிகள்

திரு. த. சிவகுமாரன்
திரு. க. குமாரதாசன்
திரு. பொ. சோதிலிங்கம்

பிரதிவாதிகள்

திரு. தி. திருநந்தக்குமார்
திரு. இரா. செல்வவடிவேல்
திரு. ஆறு. திருமுருகன்




## கரையொதுங்கிய கடற்படையின் குண்டு

திரணகம கடற்கரைப்பகுதியில் கடந்த திங்கட்கிழமை வெடிகுண்டொன்றுகரைஒதுங்கியதாகத்தெரிவிக்கப்படுகிறது

கிராமவாசிகளின் தகவலை தொடர்ந்து இராணுவக் குண்டுப் பரிசோதகர்கள் அதனை மீட்டெடுத்தனர்.

இரண்டு அடி நீளமும், 5 கிலோ எடையுமுடைய இக் குண்டு கடற்படையினரால் பயன்படுத்தப்படுவதென தெரியவருகின்றது.

# யாழ். செஞ்சிலுவைக்கு இடைக்கால நிர்வாகசபை

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளைக்கு இடைக்கால நிர்வாக சபையை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

இடைக்கால நிர்வாக சபைக்கானஉறுப்பினர்கள் அரசாங்க அதிபரினால் தெரிவுசெய்யப்பட்டிருக்கின்றனர்.

மன்னார் மாவட்டத்தின் முன்னாள் அரசாங்க அதிபர் திரு. ஏ.சி. செபநாயகம் தலைமையில் இந்த இடைக்கால நிர்வாகம் செயற்படவுள்ளது. திரு வேலாயுதம், திரு. குருபரன், திரு. கணநாதன், திரு. தியாகராஜா ஆகியோரும் இந்த நிர்வாக சபையில் அங்கம் வகிக்கின்றனர். நாளை திங்கட்கிழமை கடமைகளைப் பொறுப்பேற்க உள்ளனர்.

(க), (பா)

## ஐம்பத்தியொரு தம்பதிகள் ஒரேநாளில் திருமணப்பதிவு

(பருத்தித்துறை)

உடுப்பிட்டியில் திருமணப் பதிவில்லாமல் குடும்பம் நடத்திவந்த 51 தம்பதிகளுக்கு யாழ் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு சு. டிவகலாலாவின் நடவடிக்கைகளையடுத்து ஒரே நாளில் திருமணப்பதிவுகள் நடத்தி வைக்கப்பட்டன. உடுப்பிட்டி இராஜலிங்க சனசமூக நிலையத்தில் யாழ். உள்ளூராட்சித் திணைக்கள ஆய்வு உத்தியோகத்தர் திரு. க. இராசையா தலைமையில் இத்திருமணப்பதிவுகள் நடைபெற்றன. வடமராட்சி மேலதிக மாவட்ட பதிவாளர் திரு. த மாணிக்கவாசகர் தலைமையில்திருமண பதிவாளர்களான திரு.க. கந்தசாமி ச.வரஅருட்பிரகாசம் ஆகியோர் திருமணப்பதிவுகளை நடத்தினர். இவ்வைபவத்திலே கரவெட்டி பிரதேசசபை நிர்வாகஅதிகாரிதிருச செவ்வந்திநாதர், கரவெட்டி பிரதேச சனசமூக நிலையங்களின் சமாசத் தலைவர் திரு. க. வேலாயுதபிள்ளை ஆகியோரும் கலந்துகொண்டனர். (25)

## நெல்லியடி வங்கிக் கிளையில் ஊழியர்களுக்குப் பாராட்டு

(பருத்தித்துறை)

வடமாகாணத்தின் சிறந்த இலங்கைவங்கிக் கிளையாகத் தெரிவான நெல்லியடி இலங்கை வங்கிக் கிளையின் ஊழியர்களுக்கு விருதுகளும், சான்றிதழ்களும் வழங்கும் விழா இன்று இரண்டாம் திகதி ஞாயிற்றுக்கிழமை நெல்லியடி இலங்கை வங்கி முகாமையாளர் திரு.சி. நடராஜலிங்கம் தலைமையில் நடைபெறுகின்றது. இவ்வங்கியின் இருபத்தைந்து ஊழியர்கள் இன்று கௌரவிக்கப்படுகின்றனர். இவ்விழாவிலே இலங்கை வங்கி யாழ். பிராந்திய முகாமையாளர் திரு. க. கணேசமூர்த்தி பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார். திருமதி கணேசமூர்த்தி விருதுகள், சான்றிதழ்களை கையளிப்பார். இலங்கை வங்கி தலைமையகமே நெல்லியடி இலங்கை வங்கிக் கிளையை சிறந்த வங்கிக் கிளையாகத் தெரிவு செய்துள்ளது. (25)

# நீர்த்தடாகத்தில் மாணவிகள் சடலங்கள்

(மாத்தறை)

திஸ்ஸமகராம பகுதியில் கடந்த வாரம் காணாமல் போன இரு மாணவிகளும் கிருந்திகங்க நீர்த்தடாகத்தில் இருந்து சடலங்களாக மீட்கப்பட்டனர்.

மேற்படி இருமாணவிகளும் பாடசாலைக்கு கடந்தவாரம் சென்றபோது திடீரெனக் காணாமல் போய்விட்டதாக பிள்ளைகளின் பெற்றோர் பொலிசில் புகார் செய்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ் இரு மாணவிகளது சடலங்களும் பிரேத பரிசோதனைக்காக நஹீணு பல்கலைக்கழக மருத்துவ பீடத்...

## 40,000 ரூபா

மன்னார் கிராண்ட் பஸாரைச் சேர்ந்த மேற்படி நபர்...

# அணு ஆயுத தடைஒப்பந்தம் இந்தியா ஒத்துழைக்கும்

## பாகிஸ்தான் பிரதமர் நம்பிக்கை

(இஸ்லாமாபாத்)

தென்னாசியாவில் நிலைத்திருக்கக்கூடிய அணுவாயுதப் பரம்பல் தடுப்பு ஒப்பந்தம் செய்யப்படவேண்டுமெனப் பாகிஸ்தான் பிரதமர் நவாப் ஷெரீப் கூறியுள்ளார். இந்தியா இதற்கு ஒத்துழைப்பு வழங்கும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

பாகிஸ்தானின் ஒப்சேர்வர் பத்திரிகை ஏற்பாடு செய்த கருத்தரங்கு ஒன்றில் பேசிய அவர் மேலும் குறிப்பிடுகையில், சர்வதேச ரீதியில் ஆயுதப் பரிகரண உடன்படிக்கைகள் கைச்சாத்தாகிவருவதால் பிராந்திய மட்டத்தில் அணு ஆயுதப் பரவல் உடன்பாடு சாத்தியமானதாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

## ஆதாரம் காட்டிப் பெறவும்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலிச் சந்தியில் சிறுதொகைப் பணம் அடங்கிய பேர்ஸ் ஒன்று பா. சந்திரகலா என்பவரால் கண்டெடுக்கப்பட்டு எமது காரியால...

## ஒலிம்பிக்போட்டிகள் -1992

பார்ஸிலோனாவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் 25ஆவது ஒலிம்பிக் போட்டிகளில் இதுவரை அறிவிக்கப்பட்ட முடிவுகளின் படி தங்கப்பதக்கங்களைப் பெற்றுக் கொண்ட நாடுகளின் பதக்க விபரங்கள் வருமாறு:

| | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
|---|---|---|---|
| சுதந்திரக் குடியரசின் பொதுநலஅமைப்பு | 21 | 12 | 11 |
| அமெரிக்கா | 14 | 15 | 14 |
| ஜெர்மனி | 11 | 10 | 11 |
| சீனா | 08 | 12 | 05 |
| ஹங்கேரி | 08 | 05 | 02 |
| அவுஸ்திரேலியா | 05 | 08 | 05 |
| தென்கொரியா | 05 | — | 03 |
| ஸ்பெயின் | 04 | — | — |
| போலந்து | 03 | 04 | 03 |
| ஜப்பான் | 03 | 02 | 05 |
| கனடா | 03 | 01 | 03 |
| பிரான்ஸ் | 02 | 01 | 09 |
| இத்தாலி | 02 | 03 | 05 |
| பிரிட்டன் | 02 | 03 | 02 |
| கியூபா | 02 | 02 | 04 |
| துருக்கி | 02 | 01 | — |
| பல்கேரியா | 01 | 03 | 01 |
| ருமேனியா | 01 | 02 | 04 |
| ஸ்லோவாக்யா | 01 | 01 | 01 |
| நோர்வே | 01 | 01 | — |
| எசுத்தேனியா | 01 | — | — |
| கிறீஸ் | 01 | — | — |

# 2,400 அமெரிக்க துருப்புகள் குவைத்திற்கு அனுப்பப்படும்

(வாஷிங்டன்)

அடுத்த மூன்று வாரங்களில் இரண்டாயிரத்து நானூறு துருப்புக்களை குவைத்திற்கு அனுப்புவது என்று அமெரிக்கா முடிவு செய்துள்ளது ஈராக்கிற்கு எதிராக தனது தாக்கும் வல்லமையை எடுத்துக் காட்டும் வண்ணம் அங்கு தயார் நிலையில் இருக்கும்படி இந்த துருப்பினருக்கு பணிக்கப்பட்டிருப்பதாக அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சின் செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. வளைகுடாவில் பாதுகாப்புக்கும், உறுதிப்பாட்டிற்கும் அமெரிக்கா கடமைப்பட்டிருக்கிறது என்பதால் அமெரிக்காவின் இந்த நடவடிக்கை அவசியமானது என்று பாதுகாப்பு அமைச்சு மேலும் கூறியுள்ளது.

அத்துடன் குவைத்தில் இந்தத்துருப்புகள் எவ்வளவு காலம் தங்கும் என்பது வரையறுக்கப்படவில்லை என்பதுடன் அடுத்த வாரத்தில் குவைத்தில் அமெரிக்க இராணுவத்தின் கடல், தரைப் படைகளின் ஒத்திகைகள் இடம் பெறவிருப்பதும் தெரிந்ததே.

குவைத்தில் ஈராக் நடத்திய படை எடுப்பின் இரண்டாவது ஆண்டை நினைவு கூரும் முகமாக இது நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

# இஸ்ரேலின் புதிய பிரதமர் அமெரிக்கா விஜயம்

(வாஷிங்டன்)

இஸ்ரேலின் புதிய பிரதமர் இட்ஷாக் ராபின் இந்த மாதமளவில் அமெரிக்க விஜயமொன்றை மேற்கொள்ள... அமெரிக்க விஜயத்தை வெள்ளை மாளிகை கடந்த செவ்வாயன்று அறிவித்திருந்தது.

ஜேம்ஸ்பேக்கர் ராஜினாமாச்...



பரிபாலன சபை

(2934)

# 31-ம் நாள் நினைவஞ்சலி

வீர உதயம்

10 — 10 — 1971



வீரச் சாவு

03 — 07 — 1992

## கப்டன் மருதவாணன்

(உமேஸ்)

(கந்தசாமி மணிமாறன்)

299, திருஞானசம்பந்தர் வீதி,
திருக்கோணமலை.

''மணிமாறன் ஆன நீ
மருதவாணன் ஆகி நின்றாய்
மருதம் என்ற ஓர் உருவம்
வந்து- எம் மனதை வருடிய
பின்னர் தான் தெரிந்தது
அன்று வந்தது மருதமல்ல
அது மருதவாணனை அழைத்துச்
சென்ற மரணம் என்று!''

உன் முகத்தை காண ஏங்கித் தவிக்கும்

**அப்பா, அம்மா, தங்கைமார், தம்பி, அண்ணன்மார், பெரியப்பா, மற்றும் உற்றார் உறவினர், நண்பர்கள்.**

(2939)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள '' ஈழநாதம் '' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 02 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது.

தள்ளாடி இராணுவத்தின ரால் கைது செய்யப்பட்டார்.

இராணுவ முகாமில் புலிக ளுடன் தொடர்பிருப்பதாகக் கூறி பலத்த சித்திரவதைக் குள்ளானார். உடலில் பயங் கரக் காயங்கள் ஏற்பட்டன. இரண்டு பெருவிரல்களும் பெருமளவில் பாதிக்கப்பட்டு ள்ளன.

காவலில் வைக்கப்பட்ட சமயம் காயங்கள் ஏற்பட்ட தற்கு விளக்கமளித்து அறி க்கை தரும்படி நீதிமன்றம் கேட்டுக் கொண்டுள்ளது.

அமிர்தகுமார், மன்னாரில் இருந்து கப்பல்மூலம் கொண்டு வரப்பட்டு புதிய மகசீன் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

எதிர்வரும் 17ஆம் திகதிக்கு முன் வழக்கு தொடரப்படா விட்டால் அமிர்தகுமார் விடு தலை செய்யப்பட வேண்டு மெனவும் நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது.

திற்கு அனுப்பி வைக்கப்பட் டுள்ளதுடன் பொலிஸார் தீவிர விசாரணையில் ஈடுபட் டுள்ளனர்.

# மகியங்கன கொலைவழக்கு; உயர்நீதிமன்றில்விசாரணை

(கொழும்பு)

மகியங்கன வர்த்தகர் கொலை வழக்கில் நான்கு எதி ரிகளும் உயர் நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்படவுள்ள னர். இந்த வழக்கின் பிரதான எதிரிகளான முன்னாள் ராஜாங்க அமைச்சர் லக்ஸ்மன் செனவிரத்தினாவும் மற்றும் மூன்று பாதுகாப்பு உத்தியோ கத்தர்களும் உயர் நீதிமன்றத் தில் விசாரணைக்கு தோன்ற வேண்டுமென தெல்தெனிய நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

### பயிற்சி

தின் பின் செய்முறைப்பரீட் சையும், எழுத்துப்பரீட்சையும் நடைபெறவுள்ளன இதன் பின்னர் இவர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்படவுள்ளது.

(07)

# மரண அறிவித்தல்

## திருமதி சி.மாகிறட்ராணி

திருமதி சின்னராசா மாகிறட் ராணியின் நல்லடக்கம் தவிர்க்க முடியாத காரணத்தால் முன்னர் அறிவித்தபடி நேற்று இடம்பெறவில்லை.

இவர் மல்லாகத்தைச் சேர்ந்த ஐயம்பிள்ளை சின்ன ராசா அவர்களின் மனைவியும், சி சூரியாவின் அன்புத் தாயாரும், ஈ. ஆர். திருச்செல்வத்தின் சகோதரியும், திருமதி சந்திரா திருச்செல்வத்தின்மைத்துனியும்ஆவார்.

அன்னாரது இறுதிச் சடங்குகள் 981, வளன்புரத்தில் உள்ள எமது இல்லத்தில் இன்று (2 - 8 - 1992) ஞாயிறு பி.ப. 3 மணிககு நடைபெற்று. நல்லடக்கத்துக்காக யாழ். புனித மரியன்னை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

981, வளன்புரம்,
கொழும்புத்துறை.

"ஜே. ஏ. நவரெட்ணம்

(சி4811)

யத்தில் ஒப்படைக்கப்பட்டுள் ளது. உரியவர்கள் ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ள வும்.

# சைக்கிள், மரதன் போட்டிகள்

(மானிப்பாய்)

நவாலியில் உள்ள மதி ஒளி சனசமூக நிலையத்தின் முத லாம் ஆண்டு நிறைவை யொட்டி இன்று மாபெரும் சைக்கிள், மரதன் ஓட்டப் போட்டிகள் நடைபெறவுள ளன.

இதில் தமிழீழ எல்லைக் குட்பட்ட சகல வீரர்களும் (ஆண்கள்)பங்குபற்றமுடியும். காலை 6 மணிக்கு மரதன் ஓட்டப்போட்டியும் 8மணிக்கு சைக்கிள் ஓட்டப்போட்டியும் நடைபெறவுள்ளது. வெற்றி பெறும் வீரர்களுக்கு தங்கப்ப தக்கம் பரிசாக வழங்கப்படும்.

### புலிகள்

இதேவேளை புலிகளின் ஊடுருவலைத் தடுக்க தமிழ் நாட்டின் கரையோரப் பகுதி களில் காவல் பலப்படுத்தப் பட்டுள்ளதாகவும் தமிழ்நாடு காவல்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

### சிங்கள

சிறிலங்கா அரச அதிகாரிக ளின் இவ்வாறான செயல் அவர்களின் இனவாதப் போக்கை காட்டுவதாக கூறப் படுகிறது.

உள்ளார். இவரின் விஜயத்தின் பின்னர் அமெரிக்க வெளியுற வுத்துறை அமைச்சர் ஜேம்ஸ் பேக்கர் ராஜினாமாச் செய் வார் என எதிர்பார்க்கப் படு கிறது,

இட்ஷாக் ராபின் இம் மாதம் 10ஆம், 11ஆம் திகதி களில் அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷின் விடுமுறை இல்ல மான மெயினில் உள்ள கென பங்போட் இல்லத்தில் சந்திக்க உள்ளார்.

இஸ்ரேலியப் பிரதமரின்

செய்வது அமெரிக்க வெளி நாட்டுக் கொள்கையை பிளவு படுத்தக் கூடுமென ஜனநாய கக் கட்சியினர் கண்டித்துள் ளனர்.

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜிம்மி கார்ட்டர் கருத்து வெளியிடுகையில் தேர் தல் பிரசாரங்களுக்குத் தலைமை வகிப்பதற்கு ஆக வெளிபுறவுத்துறை அமைச்சு பதவியை ஜேம்ஸ் பேக்கர் ராஜினாமாச் செய்வது பெரும் தவறாகும் எனக் கருத்து வெளியிட்டுள்ளார்.

# இந்தியா மீதான கட்டுப்பாடு தளர்த்தப்பட மாட்டாது

(வாஷிங்டன்)

- ஜோர்ஜ் புஷ்

இந்தியாமீதான அமெரிக்கா வின் வர்த்தகக் கட்டுப்பாடு கள் தளர்த்தப்படமாட்டாது என அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் இந்திய சஞ்சிகை க்கு அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்தார்.

இந்தியப்பிரதமருடன் தனிப் பட்டமுறையில் தொடர்ந்து நல்லுறவை வளர்க்கத் தான் விரும்புவதாகவும் ஆனால் வர்த்தகக்கட்டுப்பாடுகள்தளர் த்தப்படமாட்டாது எனவும் அவர் தெரிவித்தார்.

# உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

01- 08- 1992

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 5091

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கங்கள்:- 40-7584, 41-9480, 28 9721, 42-3615, 27-8515, 28-6748, 41-5418, 25-4164, 37-4077, 36-1094, 25-8188, 36-924. 25-3509, 36-7891, 36-3946.

வடபகுதிக்கு உள்ளே அனுமதிந்த வாகன இலக்கங்கள் 25-9869, 36-720, 37-3969, 36-7147, 36-2954, 25-3013, 36-6155, 22-8176 36-7100, 25-2327, 25-5040, 37-9151, 25-6321, 27-7930, 25-954. 22-8175, 25-2735, 36-6054, 35-7473, 36-1121, 25-6207 25-7635, 70-8005, 25-9215, 37-1131, 25-568, 25-402, 73-1953, 25-7454